28.6.2023

அ.வ.எண்.35/2022

வாசா.1 கருப்புசாமி

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் நஞ்சப்பண்ணாடி என்பவரது வாரிசு அடிப்படையில் எனக்கு சொத்துக்கள் பாத்தியப்பட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அவர் அப்பாவின் அப்பா. அவருக்கு வாசாஆ.1ன்மூலம் மேற்படி சொத்துக்கள் பாத்தியம். மேற்படி வாசாஆ.1ல் அரசூர் கிராமம் புல எண். 242/2ல் 1.65 ஏக்கர் பாத்தியப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அவர் பெயரிலுள்ள பட்டா பாஸ்புத்தகம் தாவா சொத்தில் நான் தாக்கல் செய்யவில்லை. வாசாஆ.1ல் மேல்கோட்டில் தென்வடல் நீளியாக 1.65 ஏக்கர் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 242/2 நெ. காலையை வருவாய்துறையினர் 242/1சி மற்றும் 2பி உட்பிரிவு செய்துள்ளதாக பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது எதன் அடிப்படையில் என்றால் பட்டா தவறாக 242/1சி 2பி-யில் எங்களது பெயரையும் சேர்த்துள்ளதால் நான் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். 242/1 காலை முழுவதும் ஒரு அருணாச்சல கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பூமி என்றால் சரிதான். அருணாச்சல கவுண்டரும் அவரது தம்பி கணபதிகவுண்டரும் 1920 ஆண்டு மேற்படி 242/1 காலையை கிரையம் பெற்றனர் என்றால் சரியல்ல. அவரது தகப்பனார் சுப்பண்ணகவுண்டர் தான் 1920ல் கிரையம் பெற்றார். நான் சொல்வது தவறு என்றும் அருணாச்சலகவுண்டரும் அவரது தம்பி கணபதிகவுண்டர்தான் கிரையம் பெற்றனர் சாட்சியிடம் பிரதிவாதி அவரது எதிர்வழக்குரையில் தாக்கல் செய்த ஆவணத்தை காட்டி கேட்கப்பட்டது. சாட்சி ஆவணத்தை படித்துப்பார்த்துவிட்டு சரிதான் என்று பதிலளிக்கிறார்.

அவர்களுக்கு பூர்வீக பூமி மற்றும் கிரையம் பெற்ற பூமி மொத்தம் சேர்த்து 1924ல் அவர்களுக்குள் பாகபிரிவினை ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி

பாகபிரிவினையில் அருணாச்சலகவுண்டருக்கு க.ச.எண்.242/1 உள்ள 5.16 ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 242/1 காலையிலுள்ள 5.16 ஏக்கர் நிலத்ததான் 1ஏ, 1பி, 1சி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல 1ஏ, 1பி, 2ஏ என தான் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படுவதுதான் அரசூர் கிராமம் 242 காலையில் புலவரைபடம் என்றால் சரிதான். அது பிவாசாஆ.1. மேற்படி புல வரைபடத்தில் அடிப்படையில் 1ஏ வடபுறமும் 1பி அதற்கு தென்புறமும் , 1சி அதற்கு கீழ்புறமும் ட வடிவத்தில் உள்ளது என்றால் சரிதான். 242/2 காலையும் அதே ட வடிவத்தில் உள்ளது என்றால் சரிதான். அதில் 2ஏ வடபுறமும் அதற்கு தென்புறம் 2பி 2சி மற்றும் அதற்கு கீழ்புறம் 2டி உள்ளது என்றால் சரிதான். மேற்படி 1சி காலை அருணாச்சகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி 242/1சி 60 செண்ட் நிலத்தை கீழ்கோட்டில் கருப்ப பண்ணாடிக்கு விற்பனை செய்துள்ளனர் என்றால் இல்லை. மேற்படி 242/1சி யின் மொத்த விஸ்தீரணம் 1.20 ஏக்கர் என்றால் சரியல்ல 1.10 ஏக்கர். அது மேற்படி அருணாச்சாலகவுண்டர் கீழ்புறம் 60 செண்ட் விற்றதுபோக மீதமுள்ள நீலம் அவரது வாரிசுகளின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி 242/1சி நிலஉடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பிழை ஏற்பட்டதால் அதன் அடிப்படையில் நாங்கள் உரிமைகோருகிறோம் என்றால் சரியல்ல. நில உடமை மேம்பாட்டு திட்டத்தில் 242/2 நெ. காலையில் 242/1பி என மாற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

மேற்படி பட்டா உட்பிரிவு சம்மந்தமாக நான் ஆர்டிஓ விடம் புகார் கொடுத்தேன். அதில் விசாரணைக்கு அழைக்கவில்லை. நான் சொல்வது தவறு என்றும் 2,3 தடவை விசாரணைக்கு அழைப்பாணை வந்தும் ஆஜராகி விசாரணை நடந்தது என்றால் சரியல்ல. அதேபோல் தாயம்மாள் கன்னியம்மாள் 1ம்பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக்கொடுத்தது செல்லாது என்றும் நான் பதிவுதுறையில் நான் மனு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அங்கு நாங்கள் விசாரணைக்கு சென்றோம். அங்கு நான் கொடுத்த மனுவில் பத்திரம் ரத்து தொடர்பாக நீதிமன்றத்தை அணுக

சொல்லி உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வுகள் இந்த வழக்கு தாக்கல்செய்வதற்கு முன்பாக முடிந்துவிட்டது என்றால் சரிதான். மேற்படி உத்தரவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் நினைவில்லை. அந்த உத்தரவுகள் எனக்கு எதிராக உள்ளததால்தான் அவற்றை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அருணாச்சலகவுண்டரின் மகள் சுப்பாத்தாளின் மக்கள் தான் 2,3 பிரதிவாதிகள். 2, 3 பிரதிவாதிகளுக்கு தான் 242/1 நெ. காலையில் பூமி உள்ளது என்றும் எனக்கு அந்த காலையில் பூமி எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 242/1 ஏ-யில் 2.28 ஏக்கர் உள்ளது என்றால் 2.27 ஏக்கர் உள்ளது. 1 பி-யில் 1.68 ஏக்கர் உள்ளது என்றால் சரிதான். 1 சி-யில் 1.20 ஏக்கர் உள்ளது என்றால் சரியல்ல. 1.10 ஏக்கர் உள்ளது. மேற்படி 1 சி காலையில் 60 செண்ட் விற்பனை செய்ததது போக மீதமுள்ள 4.56 ஏக்கர் அருணாச்சல கவுண்டர் வாரிசுகளிடம் தான் தற்பொழுது அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு வாரிசு அடிப்படையில் வந்த சொத்தை தான் 2,3 பிரதிவாதிகள் தான் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல. எனவே மேற்படி 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரையத்தை ரத்து செய்ய கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

மேற்படி 242/2 காலை 1 பி என உட்பிரிவு செய்யப்பட்டதை காட்ட அ பதிவேடு அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி நான் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் ஆர்டிஓ மற்றும் டிஆர்ஓ முன்பு வழக்கு விசாரணை நிலுவையில் இருக்கும்போதே நான் இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரிதான். இன்றுவரை மேற்படி மனுக்கள் அங்கு நிலுவையில் உள்ளது. வருவாய்துறையில் உட்பிரிவுகள் பொறுத்து விசாரணை நிலுவையில் உள்ளபொழுது அதுசம்மந்தமாகவே இங்கு பரிகாரம் கேட்கமுடியாது என்றால் சரியல்ல.

மேற்படி ஆவணங்கள் ரத்து செய்ய கேட்டுள்ள பரிகாரமும்எனக்கு கேட்க உரிமையில்லை என்றால் சரியல்ல.1 பி காலையை பொறுத்து நான் சுவாதீன

அனுபவத்தில் இல்லாத நிலையில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 242/2 காலை எந்த காலத்திலும் 242/1 பி எனமாறவில்லை என்றும் நான் மாறிவிட்டதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/ கருப்புசாமி

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

N RENUGA Digitally signed by N RENUGA Date: 2023.06.28 15:16:18 +0530

District Munsif,
Sulur.